பக்கங்கள்: ஆறு

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 08 திங்கட்கிழமை (25 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 331

# கொழும்பில் நள்ளிரவில் தமிழர்கள் இனந்தெரியாதோரினால் கடத்தல்

## சிங்களவர் மத்தியிலும் அதனால் பதற்றம்

கொழும்பு, ஒக்டோபர் 25

கொழும்பு மாநகரில் நள்ளிரவு வேளைகளில் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வரும் இனந்தெரியாத குழுக்களினால் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருகிறது

தலைநகருக்குள் ஊடுருவியிருப்பதாகக் கருதப்படும் விடுதலைப் புலிகளை, தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியை படையினர் தீவிரப்படுத்தியிருப்பதாகக் கூறப்படும் இச் சமயத்திலேயே ஆட்கடத்தல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு பிறப்பிக்கும் ஊரடங்கு வடக்கில் அமுலாவதில்லை

### "ராவய" செய்தியாளர் பேட்டி

லண்டன், ஒக். 25

அரசாங்கம் பிறப்பிக்கும் ஊரடங்குச் சட்டம் வடக்கில் அமுலாவதில்லை, அதனை நேரில் பார்த்தோம்.

வடபகுதிக்குச் சென்ற அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்தபின்னர் கொழும்பு திரும்பியிருக்கும் "ராவய" பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரே இவ்வாறு தெரிவித்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 149 படையினர், 8 பொலீஸார் கடந்த மாதத்தில் உயிரிழப்பு

### 302 துருப்புகள் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

கடந்த ஒரு மாத காலத்தில் 149 ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், 8 பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் அவசர கால நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த ஒரு மாத காலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 302 படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் துப்பாக்கிச் சூடு இராணுவ லெப்டினன்ட் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 25

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

வவுனியா நகருக்கு அப்பால் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராணுவ லெப்டினன்ட் சாலிய புள்ளே என்பவரே கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூடு தலையில் பட்டதை அடுத்து அந்த இராணுவ அதிகாரி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் எப்படி நடந்தது என்ற தகவல் கிடைக்கவில்லை என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.25

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

★ தலைநகர் கொழும்பில்

## அரசு, இராணுவ நிலைகளை தாக்குவதற்கு புலிகள் திட்டம்

### அதற்காகவே தற்கொலைப் படையணிகள் ஊடுருவல்

தலைநகர் கொழும்பில் உள்ள அரச மற்றும் இராணுவ நிலைகளைத் தாக்குவதற்கு புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர். அதற்காகவே விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைகள் தலைநகருக்குள் ஊடுருவியிருக்கின்றன என்று கொழும்பில் பேசப்படுகிறது.

—இவ்வாறு செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

இராணுவத் தளபதியையும், முக்கிய அரசியல் தலைவர்களையும் தாக்கிக் கொல்வதற்காகவே புலிகளின் தற்கொலைப் படை கொழும்புக்கு வந்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கவை.

வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய

## சர்வசன வாக்கெடுப்பு விரைவில்; அடுத்து மாகாண சபைத் தேர்தல்

### ஜனாதிபதி டி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஒக். 25

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு தொடர்பாக சர்வசனவாக்கெடுப்பு ஒன்றை விரைவில்நடாத்துவதற்கு அரச நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் — இதற்கு ஆதரவளிப்பது சகல சமூகத்தவரினதும் கடமையாகும் என்றும் — ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

அபிப்பிராய வாக்கெடுப்பை தொடர்ந்து இப்பகுதிகளில் மாகாண சபை தேர்தல்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தனாத்துஓயாவில் நேற்று அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றை திறந்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். (உ-3)

## கூட்டு கடற்படை நடவடிக்கை; இந்தியப் பிரதமர் வரவேற்பு?

சென்னை, ஒக். 25

இந்திய — இலங்கை கடற்படைகள் கூட்டாக — இணைந்து — செயல்படுவதன் மூலம் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைத் தடுக்க முடியும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நம்புகிறார்.

இவ்விடயம் குறித்து இந்தியாவுக்கான இலங்கைத் தூதருடன் பிரதமர் ராவ் பேச்சு நடத்தினார்.

இத்தகவல்களை இந்திரா காங்கிரஸின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட்டிருக்கிறார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர்களின் உண்ணாவிரதத்தை அடுத்து

## ஈழ அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தை சுவீடன் கைவிட்டது

சுவீடனில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை நாடுகடத்துவது என்ற திட்டத்தை சுவீடன் அரசு கைவிட்டுள்ளது.

சுவீடன் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து சுவீடன் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில் விழுந்து மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 25

வெவ்வேறு இடங்களில் கிணற்றில் தவறி விழுந்து இறந்ததாகக் கூறப்படும் மூவரின் சடலங்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த தயானந்தராசா கிரிஷ்தீபன் (5 வயது), யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த மகாதேவன் கிரிதேவன் (20 வயது), நீர்வேலியைச் சேர்ந்த முருகேசு சின்னத்தங்கம் (96 வயது) ஆகிய மூவரினதும் சடலங்களே ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

கிணற்றில் விழுந்து இறந்ததாகக் கூறப்படும் இந்த மூன்று மரணங்கள் குறித்தும் மரண விசாரணைகள் நடத்தப்பட உள்ளன. (அ-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்டுவரும் மாணவிகளுக்கான பூப்பந்துச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் தொடர்ந்து இன்று காலை 8 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

o o o

யாழ் கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் —15 வயதுக்குட்பட்டோர் —மாவட்ட நிலை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் பல்வேறு பாடசாலை மைதானங்களில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

யாழ். இந்துவில்

★ தெல்லிப்பளை இந்து ம. வி. எதிர் கரும்பராய் இந்து

★ உடுப்பிட்டி அ. மி. த. க. எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன்

கொக்குவில் இந்துவில்

★ சென் ஹென்றீஸ் எதிர் சண்டிலிப்பாய் ம. வி.

★ சென் ஜோன்ஸ் ம. வி. எதிர் இளவாலை மெய்கண்டான்

கனகரத்தினம் ம. ம. வி. எதிர் அருணோதயா

வட்டுவில் ம. வியில்

★ சாவகச்சேரி இந்து எதிர் நெல்லியடி ம. ம. வி.

★ கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர் யூனியன் கல்லூரி

★ யாழ். இந்து எதிர் புங்குடுதீவு சண்முகானந்தா.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 25

கல்வி அபிவிருத்தித் கழக நிதிக்கணக்கு மற்றும் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் தொடர்பான—பாடசாலை அதிபர்களுடனான—கலந்துரையாடல்கள் கோட்ட ரீதியாக இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. சகல பாடசாலை அதிபர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் அவற்றில் பங்குபற்றவுள்ளனர்.

கோப்பாய், உடுவில் கல்விக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்—

சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்திலும்—

கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு கோட்டங்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும். (உ-5)

## அரசு பிறப்பிக்கும் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

நந்தன வீரரத்ன, ஹஸங்க ரத்னமல்ல, சுனில் ஜயசேகர, பி. சுரேஷ் டி சில்வா ஆகிய நாலு செய்தியாளர்களே வடக்கே வந்து திரும்பினர்.

இவர்களில் நந்தன வீரரத்ன தமது அனுபவங்களை பி.பி.ஸியின் சிங்கள சேவையில் விவரித்தார்.

நேற்றைய பி.பி.ஸி சிங்கள சேவை நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது:-

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் மீது காரணமின்றி "சுப்பசொனிக்" குண்டு வீச்சு நடத்தியதில் நால்வர் உயிரிழந்தனர். அருகிலிருந்த பாலர் பாடசாலையின் பிள்ளைகளும், அருகில் நின்ற இருவரும் காயமுற்றனர். அந்த இடத்தைச் சென்று பார்த்தோம்.

நாம் அச்சுவேலி ஊடாகச் சென்றபோது அப்பகுதியில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்த்துப் புகைப்படம் எடுத்தோம்; பலர் காயமடைந்திருந்தனர். காயமுற்று இரு கால்களை இழந்த ஒருவரை நாங்கள் சென்ற வாகனத்தில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேண்டி ஏற்பட்டது.

இலை, குழைகளால் மூடப்பட்ட வாகனங்களில் காயமுற்ற விடுதலைப் புலிகள் போராளிகள் யாழ். ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக எடுத்து வரப்பட்டதைப் பார்த்தோம். அப்போதுதான் வலிகாமம் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியிருப்பது குறித்தும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பது பற்றியும் அறிந்தோம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு அமுலாகவில்லை; அனைத்தும் இயங்கின; நாங்கள் எல்லா இடங்களுக்கும் சென்றோம். எங்கும் திரிந்தோம்.

விமானக் குண்டு வீச்சில் மண் திணி, பதுங்கு குழி மூடப்பட்டு இருபது பொதுமக்கள் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் குவிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்.

பிரேத அறையின் துர்நாற்றத்தைச் சகிக்க முடியவில்லை எனது வாழ்க்கையில் இந்தளவு துர்நாற்றத்தை நான் நுகர்ந்ததே இல்லை. மூன்று நான்கு முறை வாந்தியெடுத்த பின்னரே அந்தத் துர்நாற்றத்தை சுவாசித்ததால் ஏற்பட்ட அவதியினின்றும் விடுபட்டேன்.

இதுவே யாழ். ஆஸ்பத்திரியின் நாளாந்த நிலைமை என அங்கு பணிபுரிபவர் ஒருவர் சொன்னார்.

'யாழ் தேவி' நடவடிக்கையில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு அமைக்கப்பட்ட வீர அஞ்சலிகளை கொக்குவில், சுன்னாகம் ஆகிய இடங்களிலும் கோப்பாய் மற்றும் வடமராட்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பார்த்தோம்.

யாழ்ப்பாண மக்கள் மிகக் கஷ்டமான நிலையில் வாழ்கிறார்கள். பெரும்பாலானோருக்கு தாம் அணிந்துள்ள உடைகளைக் கூட மாற்ற வசதியில்லை.

மண்ணெண்ணெய், தீப்பெட்டி முதல் அனைத்துப் பொருள்களும் அதிக விலையில் விற்கப்படுகின்றன.

கொழும்பில் 1 ரூபா ஐம்பது சதம் அறவிடப்படும் தூரங்களுக்கு யாழ்ப்பாணத்தில் பஸ் கட்டணம் 25 ரூபா.

யாழ். விவசாயிகள் பலர் மரவள்ளியை பயிரிடுகின்றனர். அதனையே பெரும்பாலும் அவர்கள் உண்கின்றனர்.

மாணவர்கள் இரவில் படிக்க முடியாது.

இக்கஷ்டங்களுக்கு மத்தியிலும் யாழ். மக்கள் கலை நிகழ்வுகளில் ஆவலுடன் பங்குபற்றுவதைக் கண்டோம் — என்றார்.


உ

சிவமயம்

இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்

### கைதடி சைவச் சிறுவர் இல்லம்

### கொடி தினம் 10 - 3 - 93

மேற்படி கொடிதினம் தொடர்பாக நாம் பிரசுரித்த நன்றி நவிலலில் நாம் இலங்கை வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, மக்கள் வங்கி, ஹற்டன் நஷனல் வங்கி முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்றி கூறத் தவறிவிட்டோம். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நா. முத்தையா
தலைவர்

சி. நாகராசா
பொருளாளர்

நல்லை ஆதீனம்.
நல்லூர்.

(27775)



உ

ஸ்ரீராம ஜெயம்

### ★ திறப்பு விழா அழைப்பு ★

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 9ஆம் நாள் இன்று (25-10-1993) திங்கட்கிழமை காலை 10 30 மணி முதல் 11-30 வரை வரும் தனு இலக்கின சுபவேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

### ★ வின்ஸர் பேக்கரி அன் தேனீர்சாலை ★
### WINSOR BAKERY and TEA ROOM

என்னும் ஸ்தாபனத்தை திரு. த. சிவசுப்பிரமணியம் (தலைவர், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்) அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கவுள்ளதால் அவ்வமயம் தாங்களும், தங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து இவ்விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்,
இல. 178, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(27778)



பெண்மைக்கு மெருகேற்றும், இளமைக்கு எழிலூட்டும்
தங்க நகைகளின் தங்கச்சுரங்கம்
தங்கநகை உலகில்

### சோபனா நகை மாளிகை

116 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


உரிமையாளர்:- ந. சத்தியரூபன்.

(27777)



### 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்
08 — 03 — 1943



மண்ணின் மடியில்
25 — 09 — 1993

திதி: 25 — 10 — 1993

திருமதி
சந்திரேஸ்வரி நவரட்ணம்

சிரித்து மலர்ந்த செந்தாமரை முகமும்
இலட்சுமிகரம் இலங்கும் இயற்கைத் தோற்றமும்
பூரித்து எங்கள் இதயங்களில் என்றும்
இயங்கிக் கொண்டேயிருக்கும்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவன், பிள்ளைகள்.

"மகேஸ்வரி வாசா"
குருசாமடம்,
ஆனைக்கோட்டை.

(27774)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வவுனியா கல்வி கல்லூரிக்கு வேறு மாவட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக் 25

வவுனியாவில் இயங்க ஆரம்பித்திருக்கும் கல்விக் கல்லூரியில் அனுமதி கோரி விண்ணப்பித்த தமிழ் மாணவர்கள் அங்கு செல்லாததால் வேறு மாவட்ட மாணவர்களை அனுமதிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இக்கல்லூரி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

கல்லூரியில் சேர விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தை சேர்ந்த தமிழ் மாணவர்கள் இதுவரை அங்கு வந்து சேரவில்லை எனவும் —

தமிழ் மாணவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட தொகையில் இன்னும் 60 மாணவர்கள் சமுகமளிக்க வேண்டியுள்ளதாகவும் —

தற்சமயம் சமுகமளித்த 30 மாணவர்களில் 20 பேர் சிங்கள மாணவர்களே என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மாணவர்களுக்காக இன்றும் 60 இடங்கள் உண்டு என்றும் —

அவர்கள் சமுகமளிக்காத பட்சத்தில் வெளிமாவட்ட தமிழ் - சிங்கள மாணவர்களைக் கொண்டு அந்த இடங்களை நிரப்ப முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(த-6)

## யுனிசெவ் உயரதிகாரிகள் அடுத்த மாதம் வருவர்

யாழ்ப்பாணம், ஒக். 25

யுனிசெவ் ஸ்தாபனத்தின் நான்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் அடுத்த மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வர உள்ளனர்.

யுனிசெவ் ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி பீற்றர் ஒல்றபோர்ச், ஆசியப் பகுதிக்கான சிரேஷ்ட திட்டப் பொறுப்பதிகாரி சூ வெங், சிரேஷ்ட அவசர திட்ட பொறுப்பதிகாரி திரு. பீற்றர் மக்டெமோற், கொழும்பு சிரேஷ்ட திட்டப் பொறுப்பதிகாரி திரு டேவிட் பேக்கர் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

யாழ்ப்பாணத்தில் குழந்தைகளின் போஷாக்கு நிலைமை, யுனிசெவ் உதவிகள் போதிய அளவு கிடைக்காமை ஆகியவை தொடர்பாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி யுனிசெவ் ஸ்தாபனத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கு கடிதம் எழுதி இருந்தார்.

இதனை அடுத்தே யுனிசெவ் உயர் அதிகாரிகளின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெறுகிறது. (இ-162)

## யாழ். மாவட்டத்திற்கென மாகாண கல்வி பணிப்பாளர் விரைவில் நியமனமாவார்

யாழ். மாவட்டத்துக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஒருவரை நியமிக்க வடக்கு-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

மாகாண சபையின் திட்டங்களை யாழ். மாவட்டத்தில் அமுல் செய்வதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து தடங்கல்கள் காரணமாக மாகாண கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் திருகோணமலையில் கடமையாற்றும் மாகாண கல்விப் பணிப்பாளரின் அதிகாரங்களைக் கொண்டவராக இவர் விளங்குவார் எனவும் தெரியவந்தது.

திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப்பாக தற்சமயம் மாகாண சபை கல்வி அமைச்சில் கடமையாற்றும் மாகாண கல்விப் பணிப்பாளரும்—

யாழ். மாவட்டத்திற்குப் பொறுப்பாக புதிதாக நியமனம் பெறவிருக்கும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஒருவரும்—கடமையாற்றுவர் என தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவும் ஒரு மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனம் பெறவிருக்கின்றார். (ஓ-8)

### பதவி உயர்வு

1990ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையான காலப் பகுதியில் இனவிகிதாசார அமுலாக்கத்தினால் தமது பதவி உயர்வுகளைப் பெறத் தவறிய அரச ஊழியர்களுக்கு மேலதிகதகைமை அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை—

அரசசேவை, மாகாண அரசு சேவை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு ஆட்சேர்க்கும் போது இன விகிதாசாரத்தை கடைப்பிடிக்கும் தேசிய கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை என்று பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [illegible]

## நவராத்திரி விழா பரிசளிப்பு வைபவம்

இடம்:
உருமபராய்
அருள்மிகு ஞானவைரவ சுவாமி கோயில்
வடக்கு வீதி,

**இன்று (25-10-93) திங்கள்**
மாலை 6.00 மணி

தலைவர்: பேராசிரியர் வ. ஆறுமுகம்

பிரதமவிருந்தினர்: சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இறைவணக்கமும், தமிழ்த்தாய் வாழ்த்தும்
சங்கீதபூஷணம்
திருமதி சாந்தினி மகாதேவா

கொலு அரங்கு: துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி,

சொற்பொழிவு: 'அம்பிகையை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்'
திரு. செ. சத்தியமூர்த்தி B. Sc.

### சிறப்பு இசைவிருந்து

வாத்திய பிருந்த

| | |
|---|---|
| நாதஸ்வரம்: | திரு. ஆர். கேதீஸ்வரன் |
| புல்லாங்குழல்: | திரு. சி. தர்மசீலன் |
| தவில்: | திரு. த. உதயசங்கர் |
| கடம்: | திரு. சதாவேல்மாறன் |
| கொன்னக்கோல்: | திரு. ஐ சிவபாதம் |
| வயலின்: | திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி |
| மிருதங்கம்: | திரு ஜி. கண்ணதாசன் |
| கெஞ்சிரா: | திரு. எஸ். நாகராஜன் |
| தபேலா: | திரு. ஜி. மயூரன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை.

உரும்பராய். (27771)

## சிறுவனை அடித்து சைக்கிள் பறிப்பு!

யாழ்ப்பாணம், ஒக் 25

சைக்கிளில் கடைக்கு சென்ற சிறுவனை அடித்து வீழ்த்திவிட்டு அவர் கொண்டு சென்ற பெறுமதி வாய்ந்த சைக்கிளை அவ்வழியால் சென்ற இனந்தெரியாத ஒருவர் அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் கன்னாகம் முருகேச பண்டிதர் வீதியில் இடம்பெற்றது.

(ஓ-15)

## ஆறா(ம்) மாத நீங்கா நினைவுடன் அந்தியேட்டி அழைப்பு



செல்வன்
**சண்முகநாதன் கிரிதரன் (கிரி)**
(சாவ. / இந்துக்கல்லூரி
உயர்தர வகுப்பு மாணவன் - கலைப்பிரிவு)

அன்னையின் மடியில்: 02 — 11 — 1976
ஆண்டவன் காலடியில்: 31 — 05 — 1993

திருமொழி அழகா உந்தன்
சிரித்த நல்வதன மெங்கே?
கருவிழி இரண்டும் காட்டும்
காருண்யப் பார்வை எங்கே?
அருமொழி பகருமுந்தன்
அயர்ந்த வாய் அமுதமெங்கே?
ஐயா! கிரிதரா......
மறு மொழி கூறா தெம்மை
வாட்டுதல் அழகோ ஐயா!
தந்தையும் தாயுமுந்தன்
சகோதரியும் சுற்றமுள்ளோர்
சிந்தையில் உன்னைத் தாங்கி
சிந்திடும் கண்ணீர் வெள்ளம்
அந்த நாள் நினைவினோடும்
அது துயில் அழகா ஐயா!
கிரிதரா... உந்தன்
சுந்தர வதனம் காணாத்
துடிக்குதே என்ன செய்வோம்?

ஊரிருந்தும் பேரிருந்தும் உன்னைப் போல் யாருமில்லை
எண்ணமெல்லாம் நீயே தான் எதிலுமே சோகம் தான்
ஏனய்யா பிரிந்து விட்டாய் ஏங்குகிறோம் பாரய்யா
ஐம்புலனும் இழந்து விட்டோம்
ஐயகோ விளங்கலையோ
ஒரு நொடியில் ஓடிவிட்டாய் ஒருவருமே நம்பவில்லை
ஓலமிட்டு அழுகின்றோம் உன் காதில் விழலையோ
கவலையோ குறையுமில்லை கண்களோ காயவில்லை
நாங்கள் போட்ட திட்டங்கள் கட்டங்கள்
ஆகுமுன்பே ஆகுதியானவையோ.

ஐயா! கிரிதரா...
பாசமுள்ள தாய், தந்தையருடன் ஆசை
மொழி பேச சகோதரியிருந்தும்
ஏனய்யா பிரிந்து விட்டாய்
அன்பகமே பூக்கும் அரியநெஞ்சமே உன்
பிரிவால் நின்று ஏங்குகின்றோம் இன்று
வேரற்கேணி முருகனின் திருவடியில்
மாண்பொளியாய்ச் சேர்ந்தனையே
நெஞ்சுருக அஞ்சலித்தோம் இன்று

இன்று (25-10-1993) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு சக மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்பு கூர்ந்து அழைக்கின்றோம்.

எங்கள் செல்வன் கிரிதரனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகளை புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அப்பா, அம்மா,
அக்கா, அம்மம்மா.

(இ-6271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், ரேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். ஜுலியா ரேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வாணியின் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம், சாமுத்திரிகா லட்சணம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (27727)

### G. C. E. (A/L) - 94

மேற்படி G.C.E. (A/L) 94 வகுப்பிற்கான கலை, வர்த்தக 93ஆம் ஆண்டு புள்ளி வழங்கல் திட்டம் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (இ-6427)

### "நீமாரொக்ஸ்"

சூப்பி விளக்கில் விட்டு எரிக்க ஒளிதரும் விளக்காகவும், விளக்கிலிருந்து இளம் புகை நுளம்பு விரட்டியாகவும் பயன் தருகிறது. சூழல் மாசுபடாது. பக்க விளைவுகள் இல்லை. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. போத்தல் ரூபா 90/- டசின் போத்தல் கொண்ட பெட்டி ரூபா 960/-. ஒரு மில்க் வைற் தயாரிப்பு. "மில்க் வைற்" (இ-6262)

### வகுப்புகள்

ஓவிய சிற்ப நுண்கலை வகுப்புகள் ஆரம்பமாகின்றன. மாணவருக்கும் ஏனையோருக்கும் வெவ்வேறு பிரிவுகள். இல. 6, சென்ற் கொஸ்தே வீதி, கச்சேரியடி, சுண்டிக்குளி. (27747)

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது. ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பரிசில் நவீன பயிற்சி நூல் 20 நவீன கட்டுரைகளையும் கணித தமிழ்ப் புதிர்களையும் 10 மாதிரி வினாத்தாள்களையும் விடைகளுடன் கொண்டது. கிடைக்குமிடம்: புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27762)

## செயன்முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி. சி. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் தோற்றி கூடுதல் புள்ளிகளை பெற்றவர்களுக்கான நடனம், மனையியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இதற்கான வினாத்தாள்கள் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் —

நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — ஓகஸ்ட் மாதப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் யாவும் கொழும்பில் பூர்த்தியாகி விட்டதாகவும் —

தற்சமயம் கம்பியூட்டரில் அவை பதிவுசெய்யப்படுவதாகவும் —

அடுத்த மாத நடுப்பகுதியில் முடிவுகள் வெளியாகும் — என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-8)


## 5 ஆயிரம் தமிழ்மொழி ஆசிரியர்

கொழும்பு, ஒக். 25

தமிழ் மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் காலி இடங்களை நிரப்ப அடுத்த ஆண்டில் 5,000 தமிழ் மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என கல்வி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க-17)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 24 — 01 — 1949



மறைவு: 25 — 10 — 1988

அமரர்

**சிவசிதம்பரப்பிள்ளை சிவராஜபிள்ளை**

(புனோரா)

(முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர்-சுன்னாகம்)


திதி: 31 - 10 - 1993

அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
தாய், மனைவி, பிள்ளைகள்.
சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

பங்களா லேன்,
சுன்னாகம். (6701)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**Dr சிவபாதசுந்தரம் வசந்தநாதன்**

(Dr N. S. வசந்தநாதன் MBBS; DTM&H
முன்னாள் RDHS., வவுனியா, பதுளை)

எங்களை வாழவைத்த வசந்தம் விடைபெற்று
ஆண்டுகள் ஐந்தாகின
இன்னுயிரையெல்லாம் மருத்துவ சேவையால்
மகிழவைத்த தென்றல் வசந்தம்
அன்னியரின் அட்டூழியத்தால் அழிக்கப்பட்டதுமேனோ?
இன்னுயிரை இழந்து விட்ட நாங்கள்-
ஐந்தாண்டுகள்
கழிந்த இன்றுமட்டுமல்ல என்றுமே எங்கள்
குலமுதல்வரை நினைவில் போற்றுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்பு மனைவி, மக்கள், தாய்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனிமார், சகலர்கள், உற்றார்,
உறவினர்கள்.

258, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (6554)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை

# கேள்வி அறிவித்தல் - 1994

01 - 01 - 1994 முதல் 31 - 12 - 1994 வரைக்கான காலப் பகுதிக்குள் கீழ்க்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் 11 - 11 - 1993 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் (மல்லாகம்) 10 - 11 - 1993 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கீழ்க்காணும் அட்டவணைப்படி மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப் பிரதியை "விசேட ஆணையாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, (மல்லாகம்)" என முகவரியிட்டு பிரதேச சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட வேண்டும். இணைப்பிரதியை "பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்," என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அட்டவணை

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திர பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | |
| 1. மல்லாகம் சந்தை | 100-00 | 250 00 | 8000-00 |
| 2. அளவெட்டி புதிய சந்தை | 100 00 | 250-00 | 2300-00 |
| 3. மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கடை வாடகை மாதாந்தம் 100/-) | 100-00 | 250-00 | 10000-00 |
| 4. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை (கடை வாடகை மாதாந்தம் 100/-) | 100-00 | 250-00 | 88500-00 |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | |
| 1. குளமங்கால் மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 250-00 | 40000 00 |

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
1993 - 10 - 22 (இ-2086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

## உதயன்

## கோரிக்கை தொடரட்டும்

ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு மீண்டும் ஒரு தடவை கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. சைப்பிரஸில் நடைபெறும் பொதுநல அமைப்பு நாடுகளின் (பொதுநலவாய) மாநாட்டில் கலந்து கொள்ளும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இம்முறை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மகஜரைத் தயாரித்து சைப்பிரஸ் மாநாட்டுக்குச் சென்ற பிரதிநிதிகளிடம் அதனைக் கையளித்துள்ளது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரும் விவகாரம் சர்வதேச அரங்கில் இத்துடன் நான்காவது முறையாக இவ்வருடம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னர் இவ்வருடம் பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 49 ஆவது மாநாட்டில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை அடுத்து ஜூன் மாதத்தில் வியன்னாவில் நடந்த மனித உரிமைகள் பற்றிய உலக மாநாட்டிலும், ஆகஸ்ட் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற இனப்பாகுபாட்டைத் தடுப்பதற்கும் சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பதற்குமான ஐ.நாவின் உப ஆணைக்குழு மாநாட்டிலும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை குறித்துக்குரல் எழுப்பப்பட்டது.

இந்த முயற்சி தொடர வேண்டும் இலங்கை ஸ்ரீலங்கா சம்பந்தப்படும் சர்வதேச மாநாடுகளில் எல்லாம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுதல் அவசியம். அப்போது தான் ஸ்ரீலங்கா அரசின் முகமூடியை சர்வதேச அரங்கில் கிழித்தெறிய முடியும்.

தமிழர் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக உலகத்துக்கு நல்லவனாகக் காட்டும் முகமூடியை அணிந்திருக்கும் ஸ்ரீலங்கா உண்மையில் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து மனித உரிமை மீறலில் மிகப் பயங்கரமாக ஈடுபட்டு வருகிறது என்பது உலகத்துக்கு அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

அது மட்டுமன்றி, தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமெனில் தனித் தேசிய இனமான அவர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவது முதற்தேவை என்பதனை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழர் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் அவர்களுக்கு உள்ள சுய நிர்ணய உரிமையின் — தமது அரசியல் அந்தஸ்தை அவர்களே நிர்ணயிக்கும் உரிமையின் — அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவேண்டும்.

உலக மாநாடுகளில் மட்டுமன்றி ஐ.நா. தான் போன்ற உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் நாட்களில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும், அங்குள்ள தமிழர் அமைப்புகளும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

சுய நிர்ணய உரிமை ஈழத்தமிழர்களின் உண்மையான, நியாயமான அரசியல் அபிலாசை என்பதனை உலகத்துக்கு உணர்த்துவதற்கு அத்தகைய நிகழ்வுகள் பெரிதும் உதவும். எறும்பு ஊரக் கற்குழியும். தமிழர் சுயநிர்ணய உரிமையை அடிக்கடி, மாதத்தில் பல நாட்கள் வெளிநாடுகளில் பிரசித்தப்படுத்தினால் அதற்கு பயன்கிடைக்கும்.

## இன்று

சித்த மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா எழுதிய "ஈழத்து சித்த மருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்" என்ற நூல் வெளியீடு இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு கைதடி யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மண்டபத்தில் நடைபெறும். (த)

o o o

ஐக்கிய நாடுகள் தினத்தை ஒட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள விழா இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த-117)

o o o

ஏழாலை இலந்தை சுட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலய இந்து இளைஞர் மன்றம், நல்லூர் கோவில் தேர்த் திருவிழா அன்று நடத்திய நாவன்மை மற்றும் கண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மரம் நாட்டு வைபவமும் இன்று இடம்பெறும். (த)

o o o

நல்லூர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலில் (பேச்சி அம்மன்) இன்று மாலை 5 மணிக்கு 'வாணிக்கு ஓர் வெற்றி விழா' என்ற தலைப்பில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (உ-5)

## முத்திரைகள் வந்தன

சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் யாழ். பிரதம தபாலகத்துக்கு வந்துள்ளன. ஆயிரம், ஐந்நூறு, நூறு ரூபா பெறுமதியான அந்த முத்திரைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

மேற்படி முத்திரைகள் தேவைப்படும் சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் தபாலகத்துடன் தொடர்பு கொண்டு தமது உத்தியோக அடையாள அட்டைகளை உறுதிப்படுத்தி முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (2-5)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தற்போது தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுவோரும் முன்னர் தொண்டர் ஆசிரியராக இருந்து பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

# இலங்கையில் 8,000 பேருக்கு 'எயிட்ஸ்' நோய்த் தொற்று

கொழும்பு, ஒக். 15

தற்பொழுது இலங்கையில் 96 பேருக்கு எச்.ஐ.வி. என்ற எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் தொற்றி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நோயினால் 25 பேர் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

— இவ்வாறு சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் அனைத்துலக எய்ட்ஸ் நோய் தடுப்பு செயல் திட்டப் பணிப்பாளர் எம்.எச். மேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் இது பற்றி தெரிவித்துள்ளதாவது:-

பொதுவான மதிப்பீடுகளின்படி இலங்கையில் சுமார் 8 ஆயிரம் பேருக்கு எச். ஐ. வி. கிருமிகள் தொற்றியிருப்பதாக கருதப்படுகிறது. இதன்படி அடுத்த 8 ஆண்டுகளில் சுமார் ஆயிரம் எய்ட்ஸ் நோயாளிகள் இலங்கையிலிருப்பர். எச். ஐ. வி. கிருமி தொற்றியோர் எண்ணிக்கை 12 ஆயிரமாக உயர்ந்துவிடும். கடந்த ஒரு வருடத்திலேயே எய்ட்ஸ் நோய் தொற்றியோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது — என்றார்.

இதேவேளையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் எய்ட்ஸ் நோய் சம்பந்தமான பிரதிப் பணிப்பாளர் வெளியிட்ட தகவலின்படி —

எச் ஐ வி. வைரஸினால் பெருமளவில் பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர்; 2 ஆயிரமாம் ஆண்டளவில் ஒரு கோடியே 30 லட்சம் பெண்கள் எய்ட்ஸினால் பாதிக்கப்படுவர்; 40 லட்சம் பெண்கள் உயிரிழப்பர். (உ-9)

# ஆந்திராவில் குண்டுவெடிப்பு! ஐந்து பேர் உயிரிழப்பு!!

லண்டன், ஒக். 15

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் தெற்கு நகரான அனந்தப்பூரில் சக்தி மிக்க குண்டு ஒன்று வெடித்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்தது.

மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் மனைவியும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டார். மேற்படி சட்ட மன்ற உறுப்பினர் சில வருடங்களுக்கு முன்னர் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கிய இந்துப் பண்டிகை ஒன்று நடக்கவிருந்த வேளையில் இடம் பெற்ற நேற்றைய குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு மக்கள் போராட்டக் குழு என்ற அமைப்பு காரணமாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கம்பவாணர் காலமானார்

தமிழகத்தின் தலைசிறந்த இராமாயண அறிஞர்களில் ஒருவரும், பாண்டிச்சேரி கம்பன் கழகச் செயலருமான கம்பவாணர் புலவர் அ. அருணகிரி காலமானதாக அறிவிக்கப்படுகிறது.

பாண்டிச்சேரியில் ஆண்டு தோறும் கம்பன் விழாவைச் சிறப்பாக நடாத்தி வந்த இவர் ஈழத் தமிழறிஞர்களை அங்கு அழைத்துக் கௌரவித்து வந்தார்.

புலவர் அருணகிரி அகில

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவு

# அரங்கப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், கரும்புலிகள் நாளை யொட்டி நடத்திய அரங்கப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை, பண்பாட்டுக்கழக யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் தலைமையில் நடைபெற இருக்கும் இப்பரிசளிப்பு விழாவை யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு, மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா ஆகியோர் ஈகைச் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைப்பார்கள். கலை, பண்பாட்டுக்கழக மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமணி வரவேற்புரையும், கலை, பண்பாட்டுக்கழக தமிழீழத் துறைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் தொடக்கவுரையும் நிகழ்த்துவர்.

கலை, பண்பாட்டுக்கழக வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் திரு நா. பாஸ்கரன், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த செல்வி க. சந்திரா, அரசியல்துறை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, கலை, பண்பாட்டுக்கழக தமிழீழப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

அரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசில்களை அரசியல்துறை-தமிழீழப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார். கலை, பண்பாட்டுக்கழக வலிகாமக் கோட்டப் பொறுப்பாளர் திரு க பொழிலன் நன்றியுரையாற்றுவார்.

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து, மேற்படி போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நாடகங்கள், கரகம், கோலாட்டம், காவடி, கும்மி போன்ற நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (த)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 15

மட்டக்களப்பு மாவட்டம் அத்தியடிவெட்டை என்ற இடத்தில் கடந்த வியாழன்று காலை 6.50 மணியளவில் விடுதலைப்புலிகள் போராளிகள் சென்றுகொண்டிருந்த சமயம் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலின் போது லெப்டினன்ட் சுதாகர் (சினித்தம்பி ரவிச்சந்திரன்- வாழைச்சேனை), 2 ஆம் லெப்டினன்ட் நிரஞ்சன் அல்லது ஜெயசீலன் (ஆறுமுகம் கணேசமூர்த்தி — காரைதீவு) ஆகிய போராளிகளும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர். (உ-3)

## கொழும்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையும் தீவிரமாகியிருக்கிறது.

அடையாளம் இல்லாத வாகனங்களில் வருவோரால் தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்படுவதை அதனை நேரில் பார்த்தவர்கள் தம்மிடம் கூறியதாக தமிழ் எம். பி. ஒருவர் சொன்னார்.

இத்தகைய கடத்தல்கள் பற்றிய செய்திகளால் கொழும்பில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் திகிலும் அச்சமும் அதிகரித்திருக்கிறது.

ஒரு வாரத்துக்கு முன்னர் தலைநகரின் வெவ்வேறு பகுதிகளில் கடத்திச் செல்லப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்கள் குறித்து அந்த இளைஞர்களின் உறவினர்கள் கவலையுடன் தம்மிடம் தெரிவித்ததாக மேற்படி தமிழ் எம். பி குறிப்பிட்டார்.

கடத்திச் செல்லப்பட்ட இந் நால்வரில் மூவர் என்ன ஆனார்கள் என்பது இன்னமும் தெரியவில்லை. திரும்பி வந்த நான்காவது இளைஞர் தமது கண்கள் கட்டப்பட்டு தமக்கு தெரியாத ஓரிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்—

அங்கே தான் எங்கிருந்து வந்தார் என்பது குறித்தும் கொழும்பில் உள்ள தனது நண்பர்கள் பற்றியும் கேள்வி கேட்டு துளைத்து எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

படையினரின் தேடுதல் நடவடிக்கை சகட்டு மேனிக்கு கண்டபடி நடப்பதாகவும்—

நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அடையாளமில்லா வாகனங்களில் ஆட்கள் கடத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்களவர்களிடையேயும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தகைய உத்தியே மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் படையினர் ஜே. வி. பி. கிளர்ச்சியை கொடூரமாக அடக்கிய போதும் கைக்கொள்ளப்பட்டது.

அப்போது இடம்பெற்ற கொலைகள் மற்றும் அராஜகச் செயல்கள் போன்ற நிகழ்வுகளையே இத்தகைய ஆட்கடத்தல் சம்பவங்கள் மீண்டும் கொண்டுவரும் என்பதில் சந்தேகம் இல்லை என பி.பி.ஸி. குறிப்பிட்டது. (உ-ஈ-3-6)

எருவைக் குவித்தால் பணத்தைக் குவிக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் விநியோகம்

வாதுவ கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்பொதிகளில் எஞ்சிய தொகுதி தபால் பொதிகள் அனைத்தும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ். பிரதம தபாலகத்துக்கு கொண்டுவரப்பட்டன.

கப்பலில் 611 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டிருந்தன. அவற்றில் 316 பொதிகள் ஏற்கனவே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

எஞ்சிய 295 தபால் பொதிகளும் தற்போது யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அவை தரம்பிரிக்கப்பட்டு இன்று விநியோகிக்கப்படும் எனவாம். பிரதம தபால் அதிபர் தெரிவித்தார். (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா இராமநாதன்

(சிங்கப்பூர்)

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நல்லம்மா இராமநாதன் 11 - 10 - 1993 இல் சிங்கப்பூரில் காலமானார்.

இவர் தம்பு - செல்லமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் அருணையா, திருமதி அருணம்மா நாகலிங்கம், நேசம்மா இரத்தினசிங்கம், இராஜரட்னம் (ஓய்வு பெற்ற கட்டுறவு இலாகா உத்தியோகஸ்தர்), மனோன்மணி நல்லதம்பி ஆகியோரின் சகோதரியுமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சிங்கப்பூரில் 12 - 10 - 1993 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
த. இராஜரட்னம்
(சகோதரன்)

இல 29, கனாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி, (27772)

## V. K. நல்லையா

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபரும், ஓய்வுபெற்ற முல்லைத்தீவு உதவிக் கல்விப் பணிப்பாளரும், வல்வெட்டியைச் சேர்ந்தவருமான வி. கே. நல்லையா 24 - 10 - 93 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கனகசபை அவர்களின் அன்பு மகனும், அவமாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுமாரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தங்கம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற சிவகுரு, குலேஸ்வரன், ந. ராசா (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்றப் பதிவாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினசிங்கம், வரதராசன், வரதலீலா, வசந்தலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24 - 10 - 93 ஞாயிற்றுக் கிழமை தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
ச. நடராசா
(மைத்துனன்)

இந்து பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டி. (6702)

## மகாதேவன் ஸ்ரீதேவன்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் வீரம்புலியூரைச் சேர்ந்தவரும், தற்போது 111/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்தவருமான மகாதேவன் ஸ்ரீதேவன் நேற்று (24 - 10 - 93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற மகாதேவன் - இரத்தினமணி ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வாமதேவன், சிவதேவன், சாந்தரதேவன், மகாதேவி, இரத்தினதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி, உதயகுமார், இராசநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சபா - நேசன் (நேசன் ரெக்கிரைஸ்), சந்திரபாலன், தவபாலன் (கனடா) ஆகியோரின் மருமகனும், சின்னலிங்கம் - பொன்மணியின் பெறாமகனும், காலஞ்சென்ற ஒடலி சபாரெத்தினம் - கண்மணி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25-10-93) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சபா : நேசன்
(மாமன்)

111/1, பருத்தித்துறை வீதி,
அரசடி,
நல்லூர். (27776)

அ. தி. மு. க. - காங்கிரஸ்

# கூட்டணி குறித்து ஜெயலலிதா ராவுடன் இன்று பேசுவார்

சென்னை, ஒக். 25

தமது கட்சியான அ.தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் மீண்டும் கூட்டை ஏற்படுத்துவது குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இன்று சென்னையில் பிரதமரும் காங்கிரஸ் தலைவருமான நரசிம்மராவுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மருத்துவ மனை ஒன்றில் இருதயச் சிகிச்சைக்குள்ளாகி சுகமடைந்து வரும் உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை பார்க்க இன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

அவரை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்துச் சந்திக்க செல்வி ஜெயலலிதா தீர்மானித்துள்ளார்.

அப்போது மீண்டும் கூட்டு ஏற்படுத்துவது குறித்து நரசிம்மராவுடன் பேச ஜெயலலிதா முடிவு முடிவு செய்திருப்பதாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது.

1989 இல் நடந்த தேர்தலில் தி. மு. க. காங்கிரஸ். அ.தி.மு.க. ஆகியன தனித்தனியாகப் போட்டியிட்ட போது தி.மு.க. வெற்றி வாய்ப்பை பெற்றது தெரிந்ததே.

அந்த நிலை எதிர் வரும் தேர்தலில் இக்கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் மீண்டும் ஏற்படலாம் என்ற உணர்வு ஜெயலலிதாவுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

1991 இல் ராஜீவ் மரணத்தை அடுத்து இழந்த பலத்தை தி.மு.க மீண்டும் பெற்று விட்டது என்பதை ராணிப்பேட்டை, பழனி இடைத்தேர்தல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

இரண்டு தொகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்றது என்றாலும்-

அது பெற்ற வாக்குகளில் பெரும் சரிவு காணப்படுகிறது.

இதே வேளை—

அ.தி.மு.க. அரசை பதவி நீக்கம் செய்வதற்கான காரணங்களை ஆளுநர் சென்னா ரெட்டி நன்கு தொகுத்து வைத்துள்ளார் என்பதும்—

ஆட்சிக் கலைப்பைத் தவிர்ப்பதற்கு உள்ள ஒரே வழி காங்கிரஸுடன் கூட்டுச் சேர்வது தான் என்பதும் ஜெயலலிதாவுக்குத் தெரியும்.

ஜெயலலிதாவின் வேண்டுகோளுக்கு நரசிம்மராவ் செவி சாய்த்தால் கூட மாநில காங்கிரஸ் அதனை கடுமையாக எதிர்க்கும் என்பது தெளிவு.- இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-எ)

அ.தி.மு.கவின்

# தலைவராக ஜெயலலிதா நீடிக்கும் வரை கூட்டு இல்லை

## வாழப்பாடி அறிவிப்பு

சென்னை, ஒக். 25

ஜெயலலிதா அ.தி.மு.கவின் தலைவராக நீடிக்கும் வரை அக்கட்சியுடன் காங்கிரஸ் மீண்டும் கூட்டை புதுப்பிக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முறிவடைந்த இருகட்சி உறவைப் புதுப்பிப்பதற்கு காங்கிரஸ் தரப்பில் இருந்து யாரும் முயற்சிக்கவில்லை என்றும்—

இது தொடர்பாக வெளியான பத்திரிகைச் செய்திகள் வெறும் யூகங்களே என்றும் அவர் கூறினார்.

இன்று தமிழக சட்டசபையின் மாரிகாலத்தொடர் ஆரம்பமாகிறது.

அ.தி.மு.க ஆட்சியை முழு அளவில் தாக்கி சட்டசபையில் பேச காங்கிரஸ் தயாராகிக் கொண்டிருக்கிறது.

அடுத்தவர் தாக்கினாலும் அமைதியாக இருங்கள் என்று ஜெயலலிதா அ.தி.மு.கவினருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். என சென்னையில் இருந்து பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார். (உ-எ-9)

### 149 படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் காயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தோல்வியில் முடிவுற்ற 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை குறித்தும் இந்த விவாதத்தின்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவ கேணலுமாகிய அனுருத்த ரத்வத்தை, வடபகுதியில் நிலவும் உணவுப் பற்றாக்குறை பற்றிக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் அவல நிலையை நீக்க வழி செய்ய வேண்டும் என்றும்—

தொடரும் போருக்கு இராணுவத் தீர்வு காண முடியாது எனவும்—

அரசியல் தீர்வு மூலமே போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் எனவும் — அவர் தெரிவித்தார்.

அமைச்சர் செல்லச்சாமி பேசுகையில், இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வு காணப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (உ-8)

### கூட்டு கடற்படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதை, பிரதமர் உடனடியாகத் தலையிட்டு தடுக்க வேண்டும் என தமது தலைமையில் சென்ற குழு ஒன்று அண்மையில் பிரதமரைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதாகவும் அவர் சொன்னார். (உ-9)

### ஈழ அகதிகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடு கடத்தும் முடிவை எதிர்த்து இலங்கை தமிழ் அகதிகள் சுமார் 150 பேர் உண்ணாவிரதம் இருந்தனர் என்பது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்தே மேற்படி பேச்சுகள் இடம் பெற்றன. (உ-எ)

# தமிழ் மாணவர்கள் ஐவருக்கு மக்கள் வங்கி புலமைப்பரிசில்

மக்கள் வங்கி தனது 31ஆவது வருட நிறைவையொட்டி, 1992 டிசம்பரில் நடைபெற்ற ஜீ.சி.ஈ சாதாரண தர பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுச் சித்தி அடைந்த 32 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது.

அகில இலங்கை ரீதியாக தெரிவான முதல் ஐந்து மாணவர்களுக்கு மாதம் 1000 ரூபா வீதம் 2 வருடங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

மாகாண ரீதியாக ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் தெரிவாகிய மூன்று மாணவர்களுக்கு மாதம் 750 ரூபா வீதம் 2 வருடங்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

அகில இலங்கை ரீதியில் தெரிவான ஐந்து மாணவர்களில் தமிழ் மாணவர்கள் எவரும் இல்லை.

மாகாண ரீதியாகத் தெரிவான 28 மாணவர்களில் (மேற்கு மாகாணத்தில் 4 மாணவர்கள்) 5 மாணவர்கள் மட்டுமே தமிழ் மாணவர்களாவர்.

வடமாகாணத்திலிருந்து விவேகானந்தன் சஞ்ஜீவன் (யாழ் இந்து), குணசேகரம் ஜீவசேரன் (யாழ். சம்பத்தரிசியார்), தர்மராஜன் வினோதன் (யாழ். இந்து) ஆகியோரும்—

கிழக்கு மாகாணத்திலிருந்து மதனா மயூரகிரிநாதன் (மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர்), காயத்திரி சிவானந்தன் (மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர்) ஆகியோருமே 2 வருடங்களுக்கு மாதம் 750 ரூபா புலமைப் பரிசில் பெற உள்ளனர்.

### கம்ப...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கம்பன் கழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும், அவரது மரணம் தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும் என்றும் கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-10-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org